A T S

மங்கையர், ஆடவர் மனதைக் கொள்ளை கொள்ளும் வண்ண வண்ணப்பட்டு, பருத்தி புடவைக் கடல் சீமாட்டி ஜவுளி சமுத்திரம் 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

கல்யாண முகூர்த்தப் புடவைகளின் கைராசியான ஸ்தாபனம் சீமாட்டி ஜவுளி சமுத்திரம் 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

சுடர்:9 திருவள்ளுவர் ஆண்டு 2025 தை 11 திங்கட்கிழமை (24 – 01 – 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 58

# தமிழரின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக பிரபாவை ஏற்க வேண்டும்

## சுதந்திரகட்சிக்கு ஆதரவு அளிக்க அமைச்சர் தொண்டா நிபந்தனை

கொழும்பு, ஜனவரி 24

எதிர்வரும் மாகாண சபைத் தேர்தல்களிலும், நாடாளுமன்றத் தேர்தலிலும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஆதரிப்பதற்கு அமைச்சர் தொண்டமான் நிபந்தனை ஒன்றை விதித்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

தமிழ் மக்களின் அங்கீகரிக்கப்பட்ட தலைவராக விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஏற்றுக்கொள்ள வேண்டும் என்பதே அந்த நிபந்தனை ஆகும்.

சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவுக்கு அமைச்சர் தொண்டமானால் விதிக்கப்பட்டுள்ள இந்த நிபந்தனை குறித்து பாணந்துறையில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் சுதந்திரக் கட்சி எம்.பி. நெவில் பெர்னாண்டோ தகவல் வெளியிட்டுள்ளார்.

அமைச்சர் தொண்டமான் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து வெளியேறி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா தலைமையிலான பொதுமக்கள் ஐக்கிய முன்னணிக்கும் காமினி திஸநாயக்கா தலைமையிலான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கும் ஆதரவு அளிக்க இருந்ததும்—

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தற்போது ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைய விருப்பம் தெரிவித்திருப்பதும் தெரிந்தவையே.

இதனை அடுத்தே நிபந்தனையுடன் சுதந்திரக்கட்சிக்கு ஆதரவு வழங்க தொண்டமான் முன்வந்துள்ளார்.

தனது இந்த நிபந்தனையை ஏற்றுக் கொண்டால் மட்டுமே சுதந்திரக் கட்சி அதிகாரத்தில் இருக்க உதவ முடியும் எனவும் தொண்டமான் தெரிவித்துள்ளார். (இ-3)

## இந்தியாவுக்கான தூதராக பேர்னாட் திலகரத்தினா

### மீண்டும் மே மாதம் முதல் நியமனம்

இலங்கை வெளியுறவுச் செயலாளராக பணிபுரியும் பேர்னாட் திலகரத்தினா எதிர்வரும் மே மாதம் தொடக்கம் இலங்கைத் தூதராக இந்தியாவில் நியமிக்கப்படவிருக்கிறார் என்று அறிவிக்கப்படுகிறது.

தற்போது இந்தியாவில் இலங்கைத் தூதராகப் பணிபுரிந்து வரும் டாக்டர் நெவில் கனகரத்னா மே மாதம் ஓய்வு பெறுகிறார்.

டாக்டர் நெவில் கனகரத்னா 13 நாடுகளில் இலங்கைத் தூதராகப் பணிபுரிந்தவர்.

திரு. பேர்னாட் திலகரத்தினா 1982 முதல் 1989 வரை இந்தியாவில் இலங்கைத் தூதராகப் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-எ-3-162)

## அதி மேற்றிராணியார் நாளை வருகிறார்

இலங்கை கத்தோலிக்க திருச்சபை அதிமேற்றிராணியார் அதி. வண. நிக்கலஸ் மார்க்கஸ் பெர்னாண்டோ ஆண்டகை நாளை யாழ்ப்பாணம் வரவுள்ளார். அவருடன் திருமலை மட்டக்களப்பு மாவட்ட ஆயர் அதி. வண. கிங்ஸிலி சுவாம்பிள்ளை, இலங்கை துறவற சபைத் தலைவர் வண. பிதா அலக்ஸாண்டர் ஆகியோரும் கூட வருகின்றனர்.

அவர்கள் கொழும்பில் இருந்து விமானம் மூலம் பலாலிக்கு வந்து பின்னர் அங்கிருந்து கப்பல் மூலம் நாளை பருத்தித்துறைக்கு வருவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

அதிமேற்றிராணியார் குழுவினர் யாழ்ப்பாணத்தில் நான்கு நாட்கள் தங்கியிருப்பர் என்றும் —

வியாழனன்று காலை யாழ் ஆசனக் கோவிலில் காலை இடம்பெறும் கூட்டுத்திருப்பலிப் பூசையில் அவர்கள் கலந்து கொள்வர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-5-9)

## ஷெல் தாக்குதல்

அளவெட்டி, ஜன. 24

பலாலி, மாதகல் பகுதிகளில் நிலை கொண்டுள்ள படையினர் நேற்று இரவு 7.45 மணியளவில் ஏழாலை, குரும்பசிட்டி, அளவெட்டிப் பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல்களை நடத்தினர். பத்துக்கும் மேற்பட்ட ஷெல்கள் படையினரால் ஏவப்பட்டன. (இ-13-5)

## தமிழக அரசியல்வாதிகளுக்கு இந்திய அரசு எச்சரிக்கை

### புலிகள் தாக்கலாமாம்

கொழும்பு, ஜன. 24

அரச வைபவங்களில் கலந்து கொள்ளும் அரசியல்வாதிகள் ரகசிய புலனாய்வுத் துறையினால் வழங்கப்படும் பணிப்புரைகளுக்கு ஏற்ப செயற்பட வேண்டும்.

இந்திய மத்திய அரசு தமிழ் நாட்டு அரசியல் பிரமுகர்களுக்கு மேற்கண்டவாறு அறிவுறுத்தி உள்ளது.

தமிழ் நாட்டில் அரசியல் தலைவர்கள் சிலரை கொலை செய்து குழப்பத்தை ஏற்படுத்துவதற்கு விடுதலைப் புலிகள்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### வெளிநாட்டு உதவியுடன்

## பல்கலை மாணவருக்கு விரைவில் வதிவிட வசதி

வதிவிட வசதியற்ற 15 ஆயிரத்துக்கு மேற்பட்ட பல்கலைக்கழக மாணவர்களுக்கு வெளிநாட்டு உதவியுடன் வதிவிடங்களை அமைத்துக் கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

உயர் கல்வி அமைச்சர் அனுரா பண்டாரநாயக்கா மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் அனைவருக்கும் இந்த வசதி செய்யப்படும் என்றும் அவர் கூறியுள்ளார். (இ-6-3)

## தேர்தலையொட்டி கிழக்கில் தீவிர பாதுகாப்பு ஏற்பாடுகள்

### ஹமில்டன், பிராங் டி. சில்வா இன்று மட்டக்களப்பு விஜயம்

கொழும்பு, ஜன. 24

உள்ளூராட்சித் தேர்தலுக்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்று தெரிவிக்கப்படுகின்றது.

தேர்தலை ஒட்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கான மாநாடு ஒன்று இன்று மட்டக்களப்பில் நடைபெறவிருக்கிறது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் ஹமில்டன் வனசிங்கா, பொலிஸ்மா அதிபர் பிராங் டி. சில்வா ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மட்டக்களப்புக்கு இன்று விஜயம் செய்யவுள்ளனர். (இ-5-162)

## முச்சந்தி முரளி



கடைசியில காமினி கட்சி விலாசமே இல்லாமல் போகப் போகுது பாருங்கோ......!

## படையினரிடம் சிக்கிய மீனவர் நேற்றுக் கரை சேர்ந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 24

கடற்றொழிலுக்குச் சென்று கடற்படையினரிடம் சிக்கிய இருவர் கடற்படையினரால் நையப்புடைக்கப்பட்டு காயமடைந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

பாஷையூரைச் சேர்ந்த மனுவற்பிள்ளை அமலதாஸ் (வயது 37) எ. தேவதாஸ் (வயது 21) ஆகிய இருவருமே காயமடைந்தவர்களாவர்.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது:

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணிக்கு மண்டைதீவு பக்கமாக, கல்லடி என்ற கடற்பிராந்தியத்தில் பிரஸ்தாப மீனவர்கள் இருவரும் கடற்றொழிலில் ஈடுபட்டிருந்தவேளை திடீரென கடற்படையினரின் பீரங்கிப் படகுகள் அங்குவந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்தன.

எதிர்பாராதவிதமாக இடம்பெற்ற இச்சம்பவத்தால் மீனவர் இருவரும் செய்வதறியாது திகைத்து நின்ற வேளை அவர்களை அண்மித்த கடற்படையினர் அவர்களை அடித்துத்தாக்கி

(4 ஆம் பக்கம் பார்க்க)

### 7 ஆண்டுகள்

## தேர்தலில் பங்குபற்றாத கட்சிகளின் பதிவு ரத்து?

கொழும்பு, ஜன. 24

ஏழு ஆண்டுகளுக்குள் எந்த தேர்தலிலும் பங்குபற்றாத அரசியல் கட்சிகளின் பதிவை ரத்துச் செய்வது தொடர்பாக தேர்தல் ஆணையாளர் ஆராய்ந்து வருகிறார் என கொழும்பு சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தால் இது தொடர்பாக தேர்தல் ஆணையாளருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (இ-3-6)

### தென் மாகாணத்தில்

## சிறிமா தலைமையில் தேர்தல் பிரசாரம்

கொழும்பு, ஜன. 24

தென் மாகாண சபை தேர்தலுக்கான பிரசார வேலைகளை பொதுமக்கள் ஐக்கிய முன்னணி கடந்த வார இறுதியில் ஆரம்பித்துள்ளது.

அம்பாந்தோட்டை, மாத்தறை, காலி மாவட்டங்களில் பிரசார வேலைகளை முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும்—

எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் புகைப்படத்துடனான சுவரொட்டிகள் எங்கும் காணப்படுவதாகவும்— தெரிவிக்கப்பட்டுள்ளது (இ-6-3)

## காமினியை சேர்ப்பதற்கு ஐ.தே. கட்சி நிபந்தனை!

### கட்சியைக் கலைக்க வேண்டுமாம்

கொழும்பு, ஜன. 24

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியை கலைத்தால் மட்டுமே காமினி திஸநாயக்காவை ஐ. தே. கவில் சேர்க்க முடியும் என்று நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

ஐ. தே. கட்சியின் பொதுச் செயலாளரும், வீடமைப்பு நிர்மாணத்துறை, நகர திட்டமிடல் அமைச்சருமான சிறிசேன குரே இந்த நிபந்தனை குறித்து அறிவித்துள்ளதாக கொழும்பு பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கிறது.

முன்னணியின் தலைவர் காமினி திஸநாயக்காவும் முன்னணியின் செயலாளர் ஜி. எம். பிரேமச்சந்திராவும் தாம் ஐ. தே. கவில் சேரப்போவதாக பகிரங்கமாக அறிவித்திருந்தனர்.

முன்னணியைச் சேர்ந்த ஒரு பிரிவினர் தொடர்ந்தும் முன்னணியை கட்டி வளர்க்கப் போவதாக தெரிவித்துள்ளனர் என்றும்—

அதன் காரணமாகவே முன்னணியை கலைக்குமாறு ஐ. தே.க கோருகிறது என்றும்— கருத்து கூறப்பட்டது. (இ 3-162)

## ஐ.தே.க.வுடன் இணைந்தால் காமினி கட்சி பிளவுபடும்

கொழும்பு, ஜன. 14

ஐ. தே. கவுடன் தாம் இணைந்ததாக காமினியோ அல்லது பிரேமச்சந்திராவோ உத்தியோகபூர்வமாக இன்னும் தெரிவிக்கவில்லை

ஜனநாயக ஐக்கியதேசிய முன்னணியின் தலைவர்களில் ஒருவரான ஏ. சி. குணரத்தினா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

ஐ. தே. கவில் முன்னர் நிலவிய ஏகாதிபத்திய போக்கு மீண்டும் தலைதூக்கியுள்ளதாகவும் —

அத்தகைய அரசியல் கட்சியுடன் சேருவதற்கு தமது கட்சி என்றுமே எதிர்பார்க்கவில்லை என்றும் — அவர் கூறியுள்ளார்.

காமினியும் பிரேமச்சந்திராவும் சென்றாலும் அரசுக்கு ஆதரவு நல்க தாம் தயாரில்லை என்றும் அவர் கூறினார். (இ-3-6)

## வெளிநாட்டு அகதிகள் மீது ஜேர்மனியில் தீக்குண்டு வீச்சு

ஜேர்மனியில் அரசியல் தஞ்சம் கோரிய வெளிநாட்டு அகதிகள் தங்கியுள்ள இருப்பிடங்களுக்கு தீவிரவாதிகள் தீக் குண்டுகளை வீசித் தாக்குதல் நடத்தினர் என்று தெரிவிக்கப்படுகிறது. 1990 இல் இரு ஜேர்மனி [illegible] வலது சாரித் தீவிரவாதிகளின் இத்தகைய தாக்குதல்களில் [illegible] குறைந்தது முப்பது வெளிநாட்டவர்கள் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (இ-எ-6)

### தமிழ் நாட்டில்

## ஆளுநர் - முதலமைச்சர் பிணக்கு நீங்கும் அறிகுறி

சென்னை, ஜன. 24

இம்மாதம் 26 ஆம் திகதி சென்னை கோட்டையில் இடம்பெறவுள்ள இந்தியக் குடியரசுதின விழாவில் கலந்து கொள்ளும்படி முதலமைச்சர் ஜெயலலிதாவின் பெயரால் ஆளுநர் சென்னாரெட்டிக்கு அழைப்பு அனுப்பப் பட்டுள்ளது.

ஆளுநரே அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொள்வார் என்றும் அந்த அழைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் ஆளுநர் - முதலமைச்சர் ஆகியோருக்கு இடையே நிலவிவந்த "அரசியல் பனிப்போர்" முடிவுக்கு வருவதுபோல் தெரிகிறது என்று பி. பி. ஸி. தெரிவித்தது.

தமிழக அரசியல் வானில் கவிந்திருந்த கருமேகம் கலைந்து இருள் நீங்கும் வாய்ப்பு குடியரசு தினத்துடன் ஏற்படலாம் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

## பஞ்சாப் பற்றிய அமெரிக்க கருத்துக்கு டில்லி கண்டனம்

புதுடில்லி, ஜன. 24

பஞ்சாப் பற்றி அமெரிக்க ஜனாதிபதி பில்கிளின்ரன் வெளியிட்ட கருத்தை இந்திய அரசு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்திய அரசின் கண்டனத்தையும் கவலையையும் அமெரிக்க அரசிடம் தெரிவிக்கும்படி வாஷிங்டனில் உள்ள இந்தியத் தூதர் கேட்டுக்கொள்ளப்பட்டிருப்பதாக புதுடில்லியில் வெளியுறவு அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அமெரிக்க செனட்டர் ஒருவருக்கு எழுதிய கடிதம் ஒன்றில் பஞ்சாப் பிரச்சினை பற்றியும் அங்கு மனித உரிமை பேணல் விஷயம் குறித்தும் இந்திய அரசுக்கு பாதகமான கருத்தை ஜனாதிபதி பில் கிளின்ரன் வெளியிட்டிருந்தார் இதனையே இந்தியா கண்டித்துள்ளது.

இந்தியாவுக்குப் பாதகமான கருத்துக்களை வெளியிட்டு வரும் பில் கிளின்ரனின் நிர்வாகம் பஞ்சாப் பற்றி இப்போது கருத்து வெளியிட்டுள்ளது இந்தியாவின் உள்விவகாரத்தில் தலையிடுவதாகும். அமெரிக்காவின் இந்தப் போக்கு இரு தரப்பு உறவுகளைப் பெரிதும் பாதிக்கும் என்றும் இந்திய வெளியுறவுப் பேச்சாளர் சொன்னார். (இ-எ)

## 2 லட்சத்து 25 ஆயிரம் பேர் குடாநாட்டில் இடம்பெயர்வு

### மாதம் ரூ. 5 கோடி செலவாம்

யாழ். குடா நாட்டில் நெருக்கடியான பிரதேசங்களில் இருந்து வெளியேறி வெறிடங்களில் தங்கியிருக்கும் 2 லட்சத்து 25 ஆயிரம் அகதிகளுக்கு உணவளிக்க அரசாங்கம் மாதாந்தம் 5 கோடி ரூபாவைச் செலவழிக்கின்றது.

இந்த அகதிகளில் அனேகமானோர் சேம நல முகாம்களில் தங்கியுள்ளனர்.

எஞ்சியோர் நண்பர்கள் மற்றும் உறவினர்களின் இல்லங்களில் வசிக்கின்றனர்.

இவர்கள் அனைவருக்கும் பங்கீட்டு முறையில் உணவுப் பொருள்கள் வழங்கப்படுகின்றன.

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான உணவுப்பொருள்களும் அத்தியாவசியப் பொருள்களும் கையிருப்பில் வைக்கப்பட்டுள்ளன.

இப்படி அரச தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கப்பல்கள் மூலம் தொடர்ந்தும் பொருள்கள் அனுப்பி வைக்கப்படும் என்றும் —

கடந்த டிசம்பர் 27 க்குப் பின்னர் 7 ஆயிரத்து 200 மெட்ரிக் தொன் மாவும் 3 ஆயிரத்து 200 மெட்ரிக்தொன் சீனியும் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**கண்டெடுக்கப்பட்டுள்ளது**

சிறுதொகைப் பணப்பொதி ஒன்று எமது ஸ்தாபனத்தில் கண்டெடுக்கப்பட்டுள்ளது. தவறவிட்டவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். பூபாலசிங்கம் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-7119)

Becon கல்வி நிலைய எல்லைக்குள் பெறுமதியான எசக்கடிகாரம் ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர்கள் அலுவலக நேரத்தில் தகுந்த ஆதாரம் காட்டி, Becon கல்வி நிலையம், ஸ்ரீதர் முன்பாக. யாழ். எனும் முகவரியில் பெற்றுக் கொள்ளவும். (சி-7044)

**மாணவர்களுக்கு**

மாணவர்களே! உங்களுக்குத் தேவையான பாலர் கல்வி முதல் பட்டப்படிப்புகள் வரையான சகல ஆங்கில – தமிழ் பாடப்புத்தகங்களை, ''விசேட கழிவுடன்'' ஒரே இடத்தில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள். அன்னை புத்தகசாலை (ஓ. ஆல் சிலோன் டிஸ்ரிப்யூட்டர்ஸ் இயங்கிய அதே இடத்தில்) 1191/1, K.K.S. வீதி, யாழ்ப்பாணம். (6920)

**கோழிக்குஞ்சு விற்பனை**

ஹைலைன் (Hy-Line) பிறவுண் + வெள்ளை பேட்டுக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. கோழிக் குஞ்சுகளை ஓடர் கொடுத்தவர்கள் உடன் வந்து பெற்றுக்கொள்ளவும். மொத்தமாக எடுப்பவர்களுக்கு விலை ரூபா 50/- மட்டுமே. 'மகிஷிகாபதி' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (29040)

## ஆங்கில வகுப்பு

அராலி, ஜன 24

இலங்கை செஞ்சிலுவைச் சங்க வலிமேற்கு பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மாணவர்களுக்கான மாலை நேர இலவச ஆங்கில வகுப்புகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்று வருகின்றன. தொடர்ந்து இரண்டாவது தொகுதியினருக்கான வகுப்புகளையும் ஆரம்பிக்க மாணவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. (க-12)

## சங்கானை புனித சலேசியார் ஆலய
## நூற்றாண்டு விழா

1894 -- 24 - 01 - 1994



சலேசியில் இருந்து சங்கானைக்கு சலேசியார் எழுந்தார் தனித்துவமாய் நூறு ஆண்டுகள் கண்டது ஆலயம் வீறு கொண்டது விசுவாசம் கூடிக்களிக்கின்ற இந்நாளில் கூறி மகிழ்கின்றோம் வாழ்த்துக்களை.

சங்கானை சலேசியார் ஆலய பங்கு மக்கள்.

(சி-2061)

உ
சிவமயம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஸ்ரீமுக வருடம் தை திங்கள் 14ஆம் நாள் (27 - 01 - 1994) வியாழக்கிழமை முற்பகல் 8-00 தொடக்கம் 9-30 வரையுமுள்ள பூசம் நட்சத்திரம் அமிர்த சித்தமும் சஷப கும்ப லக்கின சுபமுகூர்த்த சுபவேளையில்

எமது திருநிறை செல்வன்
**நகுலேஸ்வரன்**
[உரிமையாளர் ஜெமினி ஸ்ரோர்ஸ், சுன்னாகம்.)
அவர்களுக்கும்

எமது திருநிறை செல்வி
**சுபேதினி**
அவர்களுக்கும்.

திருவருள் துணைகொண்டு திருமணம் செய்ய பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் மணமகள் இல்லத்தில் நடைபெற இருக்கும் திருமாங்கல்யதாரண முகூர்த்தத்தில் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

வரவேற்பு விருந்துபசாரம் சனிக்கிழமை (29 - 01 - 1994)
பிற்பகல் 3-00 மணி தொடக்கம் 5-00 வரை

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு திருமதி க செல்லையா குடும்பத்தினர்
(கள்ளித்தெரு, தங்கோடை, காரைநகர்.)
முத்துக்கிருஷ்ணர் ஒழுங்கை,
இலங்கை வங்கி முன்பாக,
சுன்னாகம்.

திரு திருமதி கா. கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்
(குமுமங்குழி, காரைநகர்.)
இலங்கை வங்கி அருகாமை,
சுன்னாகம்.

[இருவீட்டார் அழைப்பு]

தந்தி: ஜெமினி ஸ்ரோர்ஸ், இல 100, கே. கே. எஸ் றோட், சுன்னாகம். (சி-2060)

ஓம் சாயிராம்

## திருமண அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான ஸ்ரீமுக வருடம் தை மாதம் 14ஆம் நாள் (27-01-1994) வியாழக்கிழமை காலை 9 00 மணி முதல் 12 00 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்,

எங்கள் கனிஷ்ட புத்திரன்
திருநிறை செல்வன்
**சிவநேசன்**
(மருத்துவத்துறை திணைக்களம்,
மருத்துவபீடம்-யாழ் பல்கலைக்கழகம்,
போதனா வைத்தியசாலை)
அவர்களுக்கும்

எங்கள் கனிஷ்ட புத்திரி
திருநிறை செல்வி
**ஜெயகௌரி**
அவர்களுக்கும்

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா அவர்களின் திருவருளால், திருநெல்வேலி, இராமநாதன் வீதி, சத்யசாயி சமித்தி மண்டபத்தில் திருமாங்கல்யதாரணம் செய்ய நிச்சயித்திருப்பதால், அத்தருணம், தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்து, நண்பகல் விருந்துபசாரத்திலும் கலந்து, சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு சி. கனகரத்தினம் ஜே. பி.யூ.எம்.
(சட்டத்தரணியும்
பிரசித்த நொத்தாரிசும்)

திருமதி
சரஸ்வதி கனகரத்தினம்,
''சிவஸ்தான்'', நல்லூர்.
யாழ்ப்பாணம்.

திரு. அ. சோமசுந்தரம்
(இளைப்பாறிய மோட்டார்
போக்குவரத்து ஆணையாளர்,
யாழ்ப்பாணம்)

திருமதி
இராஜேஸ்வரி சோமசுந்தரம்,
''தணிகை'', யமுனா வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

இருவீட்டாரின் அழைப்பு

தனிப்பட்ட அழைப்பிதழ் அனுப்ப முடியாமைக்கு மன்னிக்கவும். (29074)

## மானிப்பாய் பரிஷ் - லயன்ஸ் கழகம்

எங்களால் நடத்தப்பட்ட அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பின்வரும் ரிக்கற்களுக்குரியவர்கள் அதிர்ஷ்டம் பெற்றுள்ளார்களென்பதை இத்தால் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

1ம் பரிசு இல: **479**
2ம் பரிசு இல: **492**
3ம் பரிசு இல: **267**

பரிசுக்குரியவர்கள் **10 - 05 - 1994**க்கு முன்னர் தொடர்பு கொள்ளவேண்டும்.

''மருத மஹால்''
மானிப்பாய்.

லயன். S. S. தங்கராஜா
தலைவர்,
மானிப்பாய் பரிஷ் - லயன்ஸ் கழகம்,
(29068)

## COMPUTER கல்வி
## BASIC LANGUAGE
(4 MONTHS)

திங்கள், புதன் 8-30 — 10-30
ஆரம்பம்: 24. 01. 94
Fees: மாதம் 400/-

**LOTUS 1-2-3** (With Macro) (2 Months)

சனி, ஞாயிறு 10-30 — 12-30
ஆரம்பம்: 30.01.94
திங்கள், புதன் 10 30 — 12-30
ஆரம்பம்: 26.01.94
Fees: மாதம் 1000 00

**BUSINESS ENGLISH** (3 Months)

உயர்கல்வி கற்பவர்கள், தொழில் புரிவோர், உயர்பதவி நாடுவோருக்கு உகந்தது.
சனி, ஞாயிறு 2-30 — 4-00
ஆரம்பம்: 30.01 94
முழுக்கட்டணம் 200 00

உறுதியான கல்வியைப்பெற
**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
16, 3rd CROSS STREET'
JAFFNA

(C/7117)

## 9 ஆம் ஆண்டு நினைவஞ்சலி
## அமரர் வயித்திலிங்கம் பொன்னம்பலம்
(நெடுந்தீவு)

பிறப்பு: 27 — 07 — 1921
இறப்பு: 24 — 01 — 85

எங்கள் அன்புத் தந்தையே எம்மை விட்டு நீங்கள் பிரிந்து ஆண்டுகள் ஒன்பது ஆனாலும் உங்கள் அன்பும், பாசமும் எம்மை விட்டகலாது உங்கள் ஆன்மா சாந்தியடைய நெடுந்தீவு நெழுவினி விநாயகனை வேண்டுகின்றோம்.

மனைவி, மக்கள், மருமகள், பேரப்பிள்ளைகள்.

36, புறாடிலேன்,
யாழ்ப்பாணம். (29070)

## நினைவை விட்டு நீங்காத
## இரண்டாவது ஆண்டு



உடம்பு எடுத்தது: 04 — 05 — 1915

உடம்பை நீத்தது: 17 — 01 — 1993

**அமரர் P. M இராசரத்தினம் அவர்கள்**
(ஸ்தாபகர் - தாவடி - சத்யசாயி நிலையம்)

''நன்றி செலுத்த உன் பெற்றோரை விடப் – பெரியவர்கள் இந்த உலகில் வேறுயாரும் இல்லை'' - பாபா

சனாதன சாரதி (தமிழ்) நவம்பர் 1993

''பெற்றோர் இறந்த வருஷ திதிகளில் அக்கினிக்கு உணவிடும் ''பிண்ட பிரதான்''

''எனும் பிதிர்க் கிரியைகள் இகழ்ச்சிக் குரியவை அல்ல அவை இறந்த ஆத்மாவிற்குச் செய்ய வேண்டிய – ஒரு சேவை'' - பாபா

Sai Speaks — Vol.5

திருமதி ம. இராசரத்தினமும், பிள்ளைகளும், மருமக்களும்.

தாவடி. (29071)

# வெல்ல முடியாத யுத்தம் நிறுத்தப்பட வேண்டும்!

## நவசமசமாஜ பிரமுகர் கோரிக்கை

வெல்லப்படமுடியாத யுத்தத்தை நிறுத்தமாறு நவசமசமாஜக் கட்சிப் பிரமுகர் திரு. திருநாவுக்கரசு அரசைக் கோரியுள்ளார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு அவர் அனுப்பியுள்ள கடிதத்திலேயே இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார்.

அக் கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

''இது ஒரு வெல்லப்படமுடியாத யுத்தம் என்று அரசியல் வாதிகளும், அறிவாற்றல் உள்ளவர்களும், இராணுவ ஆய்வாளர்களும் தெரிவித்துள்ளனர்.

இந்த பயனற்ற யுத்தத்தை உடன் நிறுத்தி, பிரச்சினைக்கு தீர்வு காணும் முயற்சியை மேற்கொள்ள வேண்டும்.

இல்லாவிடின் பிரச்சினைக்கு தீர்வு காண அரசாங்கம் முயற்சிகளை எடுத்து வருகின்றது என்ற பிரசாரம் சர்வதேச சமூகத்தையும், அன்னிய நிதி நிறுவனங்களையும் பிழையாக வழிநடத்துவதற்காகவே என்று கருத வாய்ப்புண்டு.

கடந்த கால நிகழ் கால அரசுகளின் தவறுகளின் விளைவே விடுதலைப் புலிகள் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-3)

# இறுதிக் கந்தாய மருந்துவகை எடுத்து வர நடவடிக்கை

சண்டிலிப்பாய் ஜன - 24

யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் வைத்தியசாலைகளுக்கு இதுவரை வழங்கப்படாது இருக்கும் 1993 ஆம் வருட கடைசி கந்தாயத்திற்கான மருந்துவகைகள் கொழும்பிலுள்ள மத்திய மருந்துக் களஞ்சியத்திலிருந்து பெற்று கப்பல் மூலம் கொண்டு வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். சுகாதார திணைக்களத்தை சேர்ந்த இரு அதிகாரிகள் கொழும்பு சென்று இந்த மருந்து வகைகளை பொறுப்பேற்று இம் மாத இறுதியில் இங்கு அனுப்பி வைப்பதற்கு ஒழுங்குகளை செய்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை-யாழ். மாவட்டத்திலுள்ள அரசாங்க வைத்தியசாலைகளிலும் கிராமபுறங்களிலுள்ள அரச மத்திய மருந்துச் சாலைகளிலும் பலத்த மருந்து தட்டுப்பாடு நிலவி வருவது குறிப்பிடத்தக்கது. (த - 135)

# வாழ்க்கைக்கு உதவுவதே உண்மையான கல்வியாகும்

## அதிபர் பஞ்சலிங்கம் கூறுகிறார்

யாழ்ப்பாணம், ஜன. 24

பரீட்சைக்கு உதவுவதல்ல வாழ்க்கைக்கு உதவுவதே உண்மையான. கல்வி சமூகம் இதை உணரும்போது கல்வித் தரமும் உயரும்.

யாழ். கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய விஞ்ஞான தினத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு. அ. பஞ்சலிங்கம் இவ்வாறு கூறினார்.

விஞ்ஞான மன்றத் தலைவர் செல்வன் க. பகீரதன் தலைமையில் விஞ்ஞான தினமும் அறிவியல் கதிர் சஞ்சிகை வெளியீடும் கடந்த 7ஆம் திகதி இடம் பெற்றது.

திரு. பஞ்சலிங்கம் தொடர்ந்து பேசும் போது கூறியதாவது;

தொழில் நுட்ப வளர்ச்சியின் வேகம் அதிகரித்துள்ள இன்றைய உலகில் நாம் விரும்பியோ விரும்பாமலோ அதன் தாக்கம் இங்கும் ஏற்படத்தான் போகிறது. நம்மிடையே கல்வித்தரமும் பரீட்சைத் தரமும் ஒன்றோடொன்று சிக்கி எமது கல்வித் தரம் என்று தெரியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது மாற வேண்டும். மாணவர்கள் கனிவுடன் பரீட்சை எழுதப் பழக வேண்டும். இன்றேல் எமது பிரதேசத்தை விட்டு வெளியேறும் போது அவர்கள் எதுவுமே கற்காதவர்களாக காணப்படுவார்கள்.

ஆசிரியர் திரு. த. பாலச்சந்திரன் உரை நிகழ்த்திய போது கூறியதாவது;

அறிவியல் இன்று புதிய பரிமாணத்தைக் கண்டுள்ளது. புதிய தலைமைத்துவத்தினையும் சிறந்த ஆளுமையையும் தரக்கூடியது கல்வி என்ற வகையில் புறப்பாடச் செயல்களின் முக்கியத்துவம் உணரப்பட்டுள்ளது. சஞ்சிகை வெளியீடு இன்று கல்வியின் ஒரு பகுதியாகவே கொள்ளப்படுகிறது. மேற்கே அடிக்கும் விஞ்ஞான அலைகளின் தாக்கத்தை எமது பிரதேசத்தில் புலப்படச் செய்ய வேண்டிய அவசியத்தின் ஊடகமாக அறிவுக்கதிர் வெளியாகிறது.

கல்லூரி அதிபர் திரு. மு. இராமலிங்கம் தமது ஆசியுரையில் கூறியதாவது;

கல்லூரியின் வரலாற்று ஆவணங்களாகவும் மாணவர்களது ஆய்வு, ஆக்க சிந்தனைத் திறன்களின் வடிவமாகவும் சஞ்சிகைகள் வெளிவருவதன் மூலம் கல்லூரியின் வளர்ச்சியை ஒவ்வொருவரும் அறியமுடியும்.

திரு. எஸ். குணசீலன் ஆய்வுரையை நிகழ்த்தினார்.

மலரின் முதற்பிரதியை மன்றத் தலைவரிடம் இருந்து யாழ். பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை விரிவுரையாளர் டாக்டர் ஞ. உமாகாந்தன் பெற்றுக்கொண்டார்.

விஞ்ஞான தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட விஞ்ஞான அறிவுப்போட்டியில வெற்றி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை திரு. பஞ்சலிங்கம் வழங்கினார்.

மன்ற உறுப்பினர்களான மாணவர்கள் கோ. பாஸ்கரன், நா. தயாகரன், செ. பிரதீபன் ஆகியோரும் உரை நிகழ்த்தினார்கள். கவியரங்கம் இடம்பெற்றது. (க-111)

## வைத்தியர் தேவை

யாழ். நகரின் மத்தியில் இயங்க இருக்கும் வைத்திய சிகிச்சை நிலையத்திற்கு (Clinic) குழந்தை வைத்தியத்தில் அனுபவம் மிக்க வைத்தியர் (M. B.B S.) முழு நேரமாகவோ, பகுதி நேரமாகவோ கடமையாற்றத் தேவை. ஓய்வுபெற்றோர், இடம் பெயர்ந்தோர் விரும்பத்தக்கது. **31 - 01 - 1994**க்கு முன் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல: 595
C/o உதயன், யாழ்ப்பாணம்.
(சி/7108)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி
## திருமதி அம்பிகாதேவி நாகலிங்கம்
(வட்டுக்கோட்டை)

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள் அனைவரும் இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

எஸ் ஸ்ரீமோகன்
(மருமகன்)
(29065)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/1, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்.

## தீவிரமடையும் பேரினவாதம்

தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கு எதிராக சிங்கள இனவாத அமைப்பு ஒன்றை நிறுவும் முயற்சிகள் கொழும்பில் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. சிங்கள இனவாத - சிங்கள பௌத்த பேரினவாதக் — குழுக்களின் ஒன்றிணைந்த சமாஜமாக இது அமையும் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

பண்டாரநாயக்கா காலத்தில் இருந்த சிங்கள மகாசபை போலவே இது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் தலைமை இயக்கமாகச் செயற்படும் என்று எதிர்பார்க்கலாம்.

பிரிட்டிஷ்காரரிடம் இருந்து சுதந்திரம் பெற்றது முதல் இலங்கையின் தலைவிதியை சிங்கள — பௌத்த பேரினவாதமே நிர்ணயித்து வருகிறது. அதன் அதிகாரமும் செல்வாக்கும் அரசியல்துறை தொட்டு சாதாரண உணவு விநியோகம் வரை பற்றிப் படர்ந்து விரிந்துள்ளது.

அந்தக் காரணத்தாலேயே நாட்டின் ஆளுங்கட்சியும் சரி, தலைவரும் சரி ஏனைய மந்திரிப் பிரதானிகளும் சரி சிங்களப் பேரினவாதத்துக்கு தலை வணங்கும் நிலையில் உள்ளனர். அதனை எதிர்த்து, அதற்கு மாறாக எந்த முடிவையும் நாட்டின் தலைவர் எடுக்க முடியாத நிலை நிரந்தரமாக நிலவுகிறது.

சிங்களப் பேரினவாதத்தை எதிர்த்து நின்றோ அல்லது அதனுடன் முரண்பட்டோ எந்த அரசியல் கட்சியும் ஆட்சிபீடம் ஏற இயலாது. நாட்டின் அரசியல் தலைமைத்துவபீடத்தில் அமரும் எவருக்கும் சிங்களப் பேரினவாதத்துடன் முரண்படும் துணிச்சல் வருவதில்லை. தெரிந்து தெரியாமல் அத்தகைய துணிச்சல் வந்துவிட்டால் அவரது தலை உருளும்.

ஸ்ரீலங்காவே சிங்கள - பௌத்த பேரினவாதத்தின் வடிவம் என்று கூறுமளவுக்கு, பேரினவாதம் நிறுவன மயப்படுத்தப்பட்ட ஒன்றாக விளங்குகிறது. எனினும் அது வெளியில் தெரியாதவாறு பல்வேறு இனவாத, மதவாத, சிங்களத் தேசியவாத அமைப்புகள், சங்கங்கள், கட்சிகள் தனிநபர்கள் மூலம் தனது நோக்கங்களையும் இலக்குகளையும் எய்தி வருகிறது. அரசாங்கத் திணைக்களம் முதற்கொண்டு தனியார் துறை வரை உள்ள அலுவலக ப்யோன் மட்டத்தில் கூட சிங்களப் பேரினவாதம் செயற்படுகிறது. அதில் ஊறித் திளைத்தவர்களே மிகப் பெரும்பாலான சிங்கள மக்கள்!

பௌத்த - சிங்களப் பேரினவாதமும், அடிப்படைவாதமும் ஸ்ரீலங்கா தேசத்தின் சதையும் இரத்தமுமாக, ஊனும் உயிருமாக ஆழமாக வேரோடி உள்ளன. ஆனால் அதுவும் சிங்களப் பேரினவாதிகளுக்கு போதுமானதாக இல்லை; மனத்திருப்தி தரவில்லை.

அதாவது தங்களது செயற்பாடுகள் இன்னமும் தீவிரம் அடைய வேண்டும் என்பது அவர்களது எண்ணம். தமிழர்கள் உரிமை பெற்றவர்களாக, சம அந்தஸ்து உள்ள பிரசைகளாக இந்த நாட்டில் வாழக் கூடாது. அதே வேளை அவர்கள் தமது தனித்துவத்தைக் காப்பாற்றித் தமது சொந்தத்தில் ஆட்சி அமைத்து வாழவும் கூடாது என்பது பேரினவாதிகளின் இலட்சியம் அந்த இலட்சியம் எந்த வகையிலும் தோல்வி கண்டுவிடக்கூடாது என்பதற்காகவே பேரினவாதக்கும்பல்களின் புதிய கூட்டிணைப்பு.

தமிழர்கள் நடத்தும் போராட்டத்தின் மூலம் தங்களது உரிமைகளைப் பெற்று விடுவார்கள் அல்லது தனிநாடு ஒன்றை அமைத்து விடுவார்கள் என்ற அச்சம் அளவுக்கு அதிகமாகிவிட்டதையே இந்த முயற்சி காட்டுகிறது.

இனிமேல் தான் தமிழர்கள் தமது போராட்டத்தை மேலும் வலுவடையச் செய்ய வேண்டும். சிங்களப் பேரினவாதத்தின் கூட்டிணைப்பின் நாசகாரத்தை முறியடித்து முன்னேற வேண்டும் அப்போது தான் தங்கள் உரிமைகளையும், இறைமையையும் மீள்வித்துச் சுதந்திரம் காண முடியும்.

கிளிநொச்சி

# அரச சார்பற்ற நிறுவனங்கள்; செயற்பாடுகள் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், ஜன 24

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை விஸ்தரித்து ஒருங்கிணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

கனேடிய நலலெண்ணக் குழுவினரின் விஜயத்தைத் தொடர்ந்து இந்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனேடிய நல்லெண்ணக் குழுவினர் அரச சார்பற்ற குழுவாக இயங்கும் எண்ணங் கொண்டிருப்பதாகவும் இதற்கென வட பகுதியில் அலுவலகம் ஒன்றைத் திறக்க அந்தக் குழுவினர் ஆலோசித்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த. எ)

## சிங்கள இனத்தை காட்டி கொடுக்கும் தலைவர்கள்!

### சுதந்திரக் கட்சி எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஜன 24

சிங்கள இனத்தை தமிழ்த் தலைவர்களிடம் காட்டிக் கொடுத்து, நாட்டின் அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கு எந்த அரசியல் தலைவரையும் மக்கள் அனுமதிக்கக் கூடாது.

களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பி. டாக்டர் நெவில் பெர்னாண்டோ இவ்வாறு தெரிவித்தார்.

அரசியல் லாபத்துக்காக இனத்தைக் காட்டிக் கொடுப்பவர்கள் இனத்துரோகிகளே. வாதப்பிரதிவாதங்களை விடுத்து சிங்கள இனத்தினதும் நாட்டினதும் நன்மைக்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

இன்று மக்கள் ஜனாதிபதி விஜேதுங்காவுடனேயே நிற்கின்றனர் என்று கூறிய அவர் —

அதனை மாற்றியமைப்பதற்காக சுதந்திரக் கட்சிக்குள் நிலவும் வாதப்பிரதிவாதங்கள் நிறுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். (த-எ-6)

## நவம்பர், டிசம்பர் மாத மாதாந்த உதவிப்பணம்

புங்குடுதீவு, வேலணை, நயினாதீவு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பொதுசன மாதாந்த உதவிப்பணம் பெறுபவர்கள் 1993 நவம்பர், டிசம்பர் மாதங்களுக்கான கொடுப்பனவுகளை யாழ் மத்திய தபாலகத்தில் தற்காலிகமாக இயங்கும் வேலணை, புங்குடுதீவு தபாலகங்களில் பெறலாம் என்றும் —

கெற்பேலி அகதிமுகாமில் வசிக்கும் மக்களில் இம் மாதாந்த உதவிப்பணத்தைப் பெறுவோர் விடத்தல்பளை உபதபாலகத்தில் அதனைப் பெற்றுக்கொள்ளலாம் என்றும் அறிவிக்கப்படுகின்றது.

இதேவேளை—

புற்றுநோய், தொழுநோய், காசநோய் ஆகியவற்றினால் பாதிக்கப்பட்டோருக்கான 1993 டிசம்பர் மாதத்துக்கான கொடுப்பனவுகளை புங்குடுதீவு, வேலணை, விடத்தல்பளை தபாலகங்களில் பெற்றுக்கொள்ளலாம் என்றும வேலணை பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (த)

## வலி. மேற்கில் 25 வீதிகள் சிரமதானம் மூலம் திருத்தம்

வலிகாமம் மேற்கு. ஜன 24

வலிகாமம் மேற்கு பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட 25 கிராம உத்தியோகத்தர் பிரிவிலுமுள்ள 25 வீதிகள் சிரமதானத்தின் மூலம் திருத்தியமைக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கையை பிரதேச செயலர் திரு இ. இளங்கோவன் மேற்கொண்டுள்ளார்.

மேற்படி 25 கிராம உத்தியோகத்தர் பிரிவில் இருந்தும் — ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவுக்கு மோசமாக பாதிப்படைந்த ஒருவீதி என்ற அடிப்படையில் — 25 வீதிகள் தெரிவு செய்யப்பட்டு சிரமதான அடிப்படையில் திருத்தி அமைக்கப்படும்.

ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலுமிருந்து இந்த சிரமதான வேலைக்கு 20 பேர் தெரிவுசெய்யப்பட்டு, அவர்களுக்கு இலவசமாக உலர் உணவு பொருள்கள் வழங்கப்படவுள்ளன. (த-12-175)

## உவர்நில பயிர்ச்செய்கை இன்று அறுவடை விழா

கோப்பாயில் உள்ள உவர் நிலத்தில் பரீட்சார்த்தமாகப் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிர் செழிப்பாக வளர்ந்து அறுவடைக்குத் தயாராக உள்ளது.

மேற்படி நிலத்தில் இன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அறுவடை விழா நடைபெறவுள்ளது.

இத்திட்டம் வெற்றிகரமாக நடைபெறுவதால் எதிர்காலத்தில் 800 ஏக்கருக்கு பரந்திருக்கும் இவ் உவர்நிலம் பயன்பாட்டிற்குட்படுத்தப்படுமென தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன. (த)

## 27 புதிய தபால் பெட்டிகள் யாழ்.நகர பகுதியில் அமைப்பு

வட-மாகாண அஞ்சல் திணைக்களம் யாழ். நகர் பகுதியில் 27 தபால் பெட்டிகளை புதிதாக அமைக்க உள்ளது.

சிமெந்துக்கு நிலவும் தட்டுப்பாட்டை கருத்தில் கொண்டு மரப்பலகையில் தபால் பெட்டிகள் அமைக்கப்படவுள்ளன.

புதிய தபால் பெட்டிகள் மக்கள் நெரிசலாக வாழும் பகுதிகளில் வைக்கப்படும் என்று வடமாகாண அஞ்சல் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (த-17)

## பார்வை குறைந்தோருக்கு லயன்ஸ் இலவச சிகிச்சை

தென்மராட்சி, ஜன 24

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் தென்மராட்சிப் பகுதியில் உள்ள கண் பார்வை குறைந்த வறிய மக்களுக்கான கண் பரிசோதனையை கடந்த ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் நடத்தினர்.

டாக்டர் செல்வி எஸ் சரவணமுத்து கண் பரிசோதனையை நடத்தினார்.

70 பேர் பரிசோதிக்கப்பட்டு அவர்களில் விழிப்படலம் பாதிக்கப்பட்ட 10 பேருக்கு கண் சத்திர சிகிச்சையை மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டது.

சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையில் அடுத்த மாதம் சத்திர சிகிச்சை நடைபெறும் என லயன்ஸ் கழகத் தலைவர் டாக்டர் க. கே. ரி. சிவபாதம் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட கண் சிகிச்சை முகாம் அடுத்த மாத முற்பகுதியில் நடைபெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (இ-117)

## புறநிலைப் படிப்பு கற்கை நெறிகள்

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புக்கள் அலகு இவ்வாண்டில் சகல மட்டத்திலும் உற்பத்தித் திறனையும், ஆற்றல் திறனையும் அதிகரிப்பதற்கு வழிகாட்டக் கூடிய பன்னிரண்டு அடிப்படைக் கற்கைநெறிகளை நடத்தத் திட்டமிட்டுள்ளது

இவ்வகையில் பொது வாழ்வில் பிரயோக எந்திரப் பொறியியல் எனும் அடிப்படைக் கற்கைநெறி தொகுதி 1 இன் விரிவுரைகள் சென்ற சனிக்கிழமை முதல் வார இறுதி நாட்களில் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகின்றன.

மீன்பிடித் தொழில், தொடர்பாடலுக்கான ஆங்கிலம், உணவகங்களில் முகாமைத்துவம், புகைப்படக் கலை, வானிலையும் சோதிடக்கலையும் ஆகிய அடிப்படைக் கற்கைநெறிகளும், இசை ரசனை பற்றிய பொது விரிவுரைத் தொடர் நிகழ்ச்சியும் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படவுள்ளன. (க)

## தென் மாகாணசபை தேர்தல்; வேட்பாளர் தெரிவில் இழுபறி

கொழும்பு, ஜன. 24

தென் மாகாண சபைக்கு நடைபெறவிருக்கும் தேர்தலில் எதிரணி சார்பில் போட்டியிடும் வேட்பாளர்களை தெரிவு செய்வதில் இழுபறி நிலை நிலவுதாக கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவித்தன.

எதிரணியின் சார்பில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் விவரங்கள் தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணியும் ஐ. தே. முன்னணியும் தொடர்ந்து பேச்சுக்கள் நடத்தி வருவதாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணிச் செயலாளர் டி. எம். ஜயரத்தினா தெரிவித்துள்ளார்.

இதே வேளை —ஐ. தே. க. வேட்பாளர் நியமனப் பத்திரங்கள் இன்றும் நாளையும் தாக்கல் செய்யப்படவிருக்கின்றன. (த-3-6)

## இராணுவ கட்டுப்பாட்டு பகுதிக்கு தபால்கள்

இன்று திங்கட்கிழமை யாழ் மாவட்ட எல்லைக்குட்பட்ட இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளுக்கான கடிதங்களை அனுப்புவதற்குரிய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் —

எனவே பொதுமக்களை அன்றைய தினம் காலை 8 மணிக்கு முன்னர் யாழ். பிரதம அஞ்சலகத்தில் உள்ள தபாற்பெட்டியில் கடிதங்களை சேர்க்கும் படியும் பிரதம அஞ்சல் நிர்வாகம் அறிவித்துள்ளது. (த)

## போரில் வெல்ல யாகம்

ஸ்ரீலங்கா படைகளுடனான போரில் விடுதலைப் புலிகளுக்கு வெற்றி கிடைக்க வேண்டியும் —

தமிழ் மக்களுக்கு சுபீட்சமான வாழ்வு கிடைக்க வேண்டியும் — முள்ளியவளை தண்ணீரூற்று ஊற்றங்கரைப் பிள்ளையார் கோயிலில் யாகம் ஒன்று நடத்தப்பட்டது.

கடந்த 9 ஆம் திகதி முதல் கடந்த புதன் வரையான 10 நாட்கள் அப் பகுதி மக்கள் இந்த யாகத்தை நடத்தினர்.

பாடசாலை மாணவர்கள் ஆசிரியர்கள் ஆகியோரும் அந்த யாக நிகழ்வில் பங்கு கொண்டனர்.

கடந்த 90 ஆம் ஆண்டில் இரண்டாவது ஈழப்போர் தொடங்கியது முதல் வருடந்தோறும் அப்பகுதி மக்களால் இந்த யாகம் நடத்தப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## சிரமதானம்

கேணல் கிட்டுவின் முதலாவது ஆண்டு நினைவு தினத்தன்று அராலி மேற்கு நொச்சியம்பதி வீதியை பைந்தமிழ் சனசமூக நிலையத்தினரும் ராஜன் கதிர்காமர் பொதுப் பணி விளையாட்டுக் கழகத்தினரும் சிரமதான மூலம் துப்புரவு செய்து செப்பனிட்டார்கள். [க-161]

## ஆஸ்பத்திரி உபகரணங்கள் வருகின்றன

பிரிட்டிஷ் அரசாங்கம் யாழ்ப்பாணம் போதனா ஆஸ்பத்திரிக்கு அன்பளிப்புச் செய்த வைத்திய உபகரணங்களில் ஒரு தொகுதி "வாதுவ" கப்பலில் எடுத்து வரப்படுகிறது.

இது சம்பந்தமான தகவல் கொழும்பிலிருந்து யாழ். வைத்திய சாலைக்குக் கிடைத்தது.

வைத்திய உபகரணங்களுடன் யாழ். ஆஸ்பத்திரியைச் சேர்ந்த இரண்டு டாக்டர்கள் கூட வருவதாகவும்—

உபகரணங்களை பருத்தித்துறை துறைமுகத்தில் கையேற்குமாறும் —

வைத்தியசாலைப் பணிப்பாளர் நிர்வாகப் பகுதி அதிகாரிகளுக்குத் தகவல் அனுப்பியுள்ளார். (அ-17)

## ஆலயங்களில்

கொழும்புத்துறை மேற்கு சுவாமியார் வீதி ஸ்ரீ இராமகிருஷ்ண லிங்கேஸ்வர ஆலயத்தின் வருடாந்த சங்காபிஷேக விழா இன்று திங்கட்கிழமை காலை 11 30 மணிக்கு நடைபெற்று மாலை 5. 30 மணிக்கு சுவாமி வெளிவீதியுலா இடம் பெறும். (த-17)

## விவசாய ஓய்வூதியம்

யாழ்ப்பாணம். ஜன 24

யாழ் மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் ஓய்வூதியம் பெறும் விவசாயிகளின் 1994 ஜனவரி மாதத்துக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு நாளை மறுதினம் புதன் கிழமை கமத்தொழில் காப்புறுதிச் சபையின் யாழ். மாவட்டக் காரியாலயத்தில் வைத்து. வழங்கப்படும். (க-162)

## இன்று

யாழ். கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று இன்று மாலை 2 மணிக்கு முகாமைத்துவ நிலையத்தில் நடைபெறும் என்றும், இக் கூட்டத்தில் பாடசாலையின் உடற் பயிற்சி ஆசிரியரும் கலந்துகொள்ள வேண்டும் என்றும் யாழ். பிரதிக்கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த)

## லொறி உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜன.24

யாழ். மாவட்ட லொறி உரிமையாளர்களுக்கான அவசரக் கலந்துரையாடலொன்று எதிர்வரும் 27 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரியில் நடைபெறவுள்ளது. இதில் அனைத்து லொறி உரிமையாளர்களையும் கலந்து கொள்ளுமாறு யாழ் மாவட்ட அரசியல் துறை பொறுப்பாளர் திரு. சி.இளம்பரிதி கேட்டுக்கொண்டுள்ளார். (த)

# வரண்ட நிலத்தில் வளரக்கூடிய கம்பு உணவுத் தேவையை பூர்த்தி செய்யும்

கம்பு அல்லது ஆங்கிலத்தில் "பேள் மில்லற்" என்று அழைக்கப்படும் இப்பயிரிலிருந்து அதிகமாகச் சத்துடைய தானியம் கிடைக்கிறது. இதன் போசாக்குச் சத்து அரிசி, கோதுமை என்பவைகளுடன் ஒப்பிடக் கூடியவை. மாச்சத்து 67%, புரதம் 11.6%, எண்ணெய்ப் பொருள் 1.2%, கனிப்பொருள் 2.7% மும் உண்டு குரக்கனில் புரதம் 8 0%மும், மாச்சத்து 72.0 % மும் காணப்படுகின்றன. கம்பு அரிசியிலிருந்து சோறு சமைக்கவும், மாவிலிருந்து மற்றும் பல்வேறு சிற்றுண்டி வகைகள் தயாரிக்கவும் முடியும்.

### பயிர்ச்செய்கை

மணற்பாங்கான இருவாட்டி மண் இப்பயிர்ச் செய்கைக்கு உகந்தது. ஓரளவு வரட்சியைத் தாங்க வல்லது. மழை மிகவும் குறைந்த ஆபிரிக்க நாடுகளில் 20'' மழையுடன் இப்பயிர் செய்கை பண்ணப்படுகிறது எமது பிரதேசத்தில் மாரியில் கிடைக்கும் மழையிலும் இது அரைப் பங்காகும். இப்பயிரின் வேர்த்தொகுதி அதிக ஆழத்தில் இருப்பதில்லை. நீர் தேங்கி நிற்பதைச் சகிப்பதில்லை. இதன் வளர்ச்சிக் காலம் சுமார் 3½ மாதம் பெரும்பாலும் அயன்மகரந்தச் சேர்க்கை இடம்பெறுவதால் பூக்கள் தோன்றும் காலப் பகுதியில் அதிக மழை இருப்பின் மகரந்தச் சேர்க்கை பாதிக்கப்பட்டு விளைவு குறைவதற்கேதுவாகும்.

மாரியில் பயிர் செய்வதானால் கார்த்திகை முற்பகுதியிலும், கோடையில் சித்திரை - வைகாசி மாதங்களிலும் விதைப்பு செய்தல் வேண்டும்.

### விதைப்பு

வழமையான முறையில் பண்படுத்தப்பட்ட தரையில் மண்ணில் உள்ள பயிர்ப்போசணைகளின் அளவைப் பொறுத்து சேதன அசேதனப் பசளையிடுதல் சிறந்தது. ஏக்கருக்கு 50 கிலோ பொஸ்பேற் 25 கிலோ பொற்றாஸ் என்பவைகளை அடிக்கட்டாக இட்டு பின்னர் விதைப்பு செய்தல் வேண்டும்.

45 ச.மீ இடைவெளி கொண்ட வரிசைகளில் விதைகளை வரிசையில் குற்றுக்கு 15 ச.மீ இருக்கக் கூடியவாறு விதைத்தல் சிறந்தது. ஏக்கருக்கு 3 4 கிலோ விதை போதுமானது. பயிர் முளைத்து 3–4 வாரங்களில் களை அகற்றி மேற்கட்டு உரமாக 40 கிலோ அமோனியம் சல்பேற்றை இடுதல் வேண்டும். பூக்கள் அரும்பும் பருவமான 7–8 வாரங்களில் திரும்பவும் 40 கிலோ அமோனியாவை மேற்கட்டு உரமாக இடுதல் சிறந்தது. நைதரசன் சத்து வீண் விரயமாவதைத் தடுப்பதற்கு அமோனியாவுடன் அரைப்பங்கு சேதனப் பசளை அல்லது வேப்பம் பிண்ணாக்கு (... "நீமியா") யும் சேர்த்து 4ச. மீ ஆழத்தில் மண்ணுடன் கலந்துவிட வேண்டும்.

### பீடைகள்

இப் பயிரைப் பொறுத்த வரை பீடைகளின் தாக்கம் அரிதாகவே உள்ளது. மயிர்க்கொட்டிகளின் தாக்கம் அவதானிக்கப் பட்டால் குளோரிபைறி பொஸ் 20 % செறிகுளம்பினை இரண்டு திரவ அவுன்ஸ் மூன்று கலன் நீரில் கலந்து விசிறி கட்டுப் படுத்துதல் வேண்டும்.

கதிரில் மணிகள் உண்டாகும் பருவத்தில் பறவைகளின் அழிவு ஏற்படுவதை அவதானித்து 4 - 6 வாரத்திற்கு பறவைகளை விரட்டிப் பாதுகாப்பது அவசியம்.

முதிர்ச்சியடைந்த கதிர்கள் 20 - 30 ச. மீ நீளமும் 4 - 5 ச. மீ விட்டமும் உடைய உருளைகளாக இருக்கும். அவ்வப் பொழுது முதிர்ச்சியடையும் கதிர்களை சுமார் மூன்று தவணைகளில் அறுவடை செய்தல் வேண்டும். வெட்டிய கதிர்களை உலர்த்தி தடிகளால் அடித்து அல்லது மாடுகளினால் மிதித்து தானியத்தைப் பிரித்து எடுக்கல் சிறந்தது. பின்னர் தூற்றி ஈரப்பதம் சுமார் 12 % இருக்கக் கூடியதாக உலர்த்திக் களஞ்சியப் படுத்துதல் வேண்டும்.

பயிரில் எஞ்சிய பகுதிகளான தண்டு, இலைகளைக் கால்நடைத் தீவனமாக உப[illegible]

### விளைவு

செய்கை முறை முகாமைத்துவம் என்பனவற்றைப் பொறுத்து விளைவு ஏக்கருக்கு 400 – 800 கிலோ வரை வேறுபடுகிறது. பரீட்சார்த்தமாகச் செய்கை மேற்கொண்ட பொழுது ஏக்கருக்கு 1000 கிலோ விளைவு பெறப்பட்டது.

வடபகுதியில் நிலவும் உணவுத் தேவையைச் சமாளிக்க இத் தானிய உற்பத்தி ஊக்குவிக்கப்படல் வேண்டும். குரக்கனைப் போன்று கொள்வனவு செய்வதற்கான ஒரு நியாய விலை நிர்ணயமும் சிறந்தது, தரிசு நிலங்களில் இதன் உற்பத்தியை மேற்கொள்வதனால் உணவு உற்பத்தியில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமடைய முடியும்.

நுகர்வோரின் உணவு வகைகளில் இத் தானியமும் இடம் பெறக் கூடிய ருசி மிக்க உணவுத் தயாரிப்புக்களைப் பிரபல்யம் அடையச் செய்வதும் கம்பிற்குரிய சந்தை வாய்ப்பினை ஏற்படுத்த உதவும்.

### பொருளாதாரம்

நாலு பரப்பில் (1000 சதுர அடித் தரை) மானாவாரி முறையில் உற்பத்தி மேற்கொள்ளும் பொழுது உழவு, செய்வதற்கும் உரமிடுவதற்கும் மொத்த உற்பத்திச் செலவில் அரைப் பங்கு ஏற்படுகிறது. தேறிய வருமானமாக ரூபா 540/ கிடைக்கிறது. பாசனமுறையில் மேலதிகமாக எரிபொருட் செலவு ஏற்படுகிறது. இருந்த போதிலும் விளைவு அதிகரிப்பதனால் இமாசரட்டிப்பான தேறிய வருமானமாக ரூபா 1125/ கிடைக்கிறது.

ச. பொன்னுத்துரை
விவசாய ஆராய்ச்சி பொறுப்பதிகாரி திருநெல்வேலி

★

## பிராந்திய மட்டத்தில் பாடசாலை அபிவிருத்தி பணி

கொழும்பு, ஜன. 24

பாடசாலை அபிவிருத்திப் பணிகள் பிராந்திய செயலக மட்டத்தில் மேற்கொள்ளப் படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒவ்வொரு 5 பிராந்திய செயலகப் பிரிவிலும் புதிய பாடசாலை ஒன்றும் —

ஐந்து பிரதேச செயலகப் பிரிவிற்கு ஒரு உயர் நிலைப் பாடசாலை என்ற வீதத்தின் படியும் பாடசாலைகள் அமைக்கப்படும்.

இந்த அபிவிருத்தித் திட்டத்துக்கு ஏற்படும் மொத்தச் செலவு 132 கோடி ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. இத்திட்டத்துக்கு ஏற்கனவே 9 கோடி 20லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது

தற்போது நாட்டில் 10 ஆயிரத்து 71 பாடசாலைகள் உள்ளன. இவற்றில் கடந்த ஆண்டு 47 பாடசாலைகள் புதிதாகக் கட்டப்பட்டன. இப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவரின் எண்ணிக்கை 45 லட்சமாகும். (த எ)

## $1\frac{1}{2}$ லட்சம் கோழிகளுக்கு கடந்த ஆண்டில் தடுப்பூசி!

யாழ்ப்பாணம் கால்நடை வைத்தியசாலையில் கடந்த ஆண்டில் மட்டும் 1 இலட்சத்து 55 ஆயிரம் கோழிகளுக்கு தடுப்பூசி மருந்துகள் ஏற்றப்பட்டன

பெரும்பாலான கோழிகள் "றனிக்கர" என்ற நோயினால் பீடிக்கப்பட்டு தடுப்பூசி மருந்து போடப்பட்டதாகவும் யாழ்ப்பாண கால்நடை அத்தியட்சகர் எம்.தங்கராஜா தெரிவித்தார்.

இதனைவிட சென்ற ஆண்டு 7 ஆயிரம் கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டிருப்பதாகவும், 2 ஆயிரத்து 400 ஆடு மாடுகளுக்கு சினைப்படுத்தல் செய்யப்பட்டிருப்பதாகவும், அடை வைக்க 1,288 கோழி முட்டைகள் வழங்கப்பட்டிருப்பதாகவும், அவர் மேலும் தெரிவித்தார். (த-17)

**உணவுக்காய் பயிரிடுவோம்
எம் ஈழத்தை உயர்த்திடுவோம்**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கார்த்திகேசு நல்லதங்கம்
(புங்குடுதீவு - 02)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்தவரும் இல: 02 செட்டித்தெரு லேனில் வசித்தவருமாகிய திருமதி கார்த்திகேசு நல்லதங்கம் 23 - 01 - 1994 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நாகலிங்கம் கார்த்திகேசுவின் (சின்னத்துரை) அன்பு மனைவியும், திருமதி கனகரெத்தினம் மகேஸ்வரி, திரு. சுந்தரலிங்கம் (ஆளணி உத்தியோகத்தர், பிரதேச சபை கோப்பாய்), திருமதி குகனேசன் புவனேஸ்வரி (இளைப்பாறிய தெசவு ஆசிரியை), திருமதி பத்மநாதன் யோகேஸ்வரி (பிரான்ஸ்), திருமதி கமலேஸ்வரன் லீலாவதி (தாதி உத்தியோகஸ்தர், யாழ். போதனா வைத்தியசாலை) ஆகியோரின் அன்புத் தாயாரும், கோ. கனகரெத்தினம் (முன்னாள் மாகோ வர்த்தகர்), சி. குகனேசன் (படப்பிடிப்பாளர்), சு. சரஸ்வதி, ச. பத்மநாதன் (பிரான்ஸ்), கமலேஸ்வரன் (புகையிரதப் பகுதி திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம், இராசையா, சோமசுந்தரம் (ஆசிரியர்), நடராசா (ஆசிரியர்), மற்றும் பொன்னம்மா (முரசுமோட்டை), இராசம்மா ஆகியோரின் அன்பு மைத்துனியும், குணரட்ணம் சசிகலா (சுவிஸ்), தர்மரெட்ணம் இதயகலா (பிரான்ஸ்), சுபந்தன் (சுவிஸ்) தயாளன், இளங்கீரன், ரமேஷ்குமார், நிரஞ்சளா, சர்மிளா, தர்சினி, சுஜீவன், நிரோஞ்சலி (பிரான்ஸ்), சுபாகரன் (பிரான்ஸ்), இனிசாந்தினி (பிரான்ஸ்), திவாகரன் (பிரான்ஸ்), கார்த்திகா ஆகியோரின் அன்பு பேத்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (24 - 01 - 1994) காலை 10 மணியளவில் கோம்பயன்மணல் மயானத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
கா. சுந்தரலிங்கம்
(மகன்)

இல: 02, செட்டித்தெரு லேன்,
கைலாயபிள்ளையார் கோவிலடி,
நல்லூர்;
(29074)

### ஞானப்பிரகாசம் யோண்
(முன்னாள் கட்டட ஒப்பந்தக்காரர்)

ஞானப்பிரகாசம் யோன் காலமானார். இவர் காலஞ்சென்ற அக்கினேசின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற எலிசபேத் ஆசீர்வாதம், யெறோம், வில்பிறெட் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (24 - 1 - 94) திங்கட்கிழமை பி. ப. 3 மணியளவில் புனித யுவானியார் ஆலயத்தில் திருப்பலியின் பின் யாழ். கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரேசம்மா அந்தோனிப்பிள்ளை
(மருமகள்)

48, இராசாவின் தோட்ட வீதி,
யாழ்ப்பாணம்.
(29075)

### அடைக்கலம் ஜோசப் அலன்றோஸ் ராஜா

அடைக்கலம் ஜோசப் அலன்றோஸ் ராஜா 22-1-94 அன்று கொழும்பில் காலமானார். இவர் அனித்தாவின் (மபி) அன்புக் கணவரும், அடைக்கலம் சின்னத்துரை, காலஞ்சென்ற மக்டலீனின் அன்பு மகனும், வயலற், தேவி, ஜோதி, ரேவதி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
அ. தர்மராஜா
(மருமகன்)

344/7, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்
(29076)

### சி. த. சோமசுந்தரம்
(முன்னாள் காலி பிரபல வர்த்தகர்)

முன்னாள் காலி பிரபல வர்த்தகரும் தலைகாட்டியை பிறப்பிடமாகவும், வேலணை மேற்கு வேலணை 6 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சி. த. சோமசுந்தரம் நேற்றிரவு சிவபதமடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை-யார்வதிப்பிள்ளையின் கனிஷ்ட புத்திரனும், காலஞ்சென்ற மனோன்மணியின் அன்புக்கணவரும், பாலசரஸ்வதி, சொர்ணகாந்தி ஆகியோரின் அன்புத் தந்தையும் ம. க. நல்லையா, ச. செல்வராசா (பங்காளர் கிஸ்ணா ஸ்ரோஸ் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், காலம் சென்றவர்களான சி. த. அருணம்பலம் (காலி வர்த்தகர்), கனகசபை, சுப்பிரமணியம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், காலம் சென்றவர்களான மயில்வாகனம், மாணிக்கம், மற்றும் இலட்சுமி, இரத்தினம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஸ்ரீரங்கன் (ஜேர்மனி), திருமதி சிவநாதன் ஸ்ரீஜோசினி (கொழும்பு), ஸ்ரீரகு (ஜேர்மனி), ஸ்ரீராதா (கொழும்பு), ஸ்ரீநந்தன் (கொழும்பு), ஸ்ரீநிர்மலன், ஸ்ரீதீபா, ஸ்ரீமயன், யாழினி, மகிழினன், இரசனன், இரதீனன், மாலினி ஆகியோரின் அன்புப் பேரனும், சௌதராமின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (24-1 94) அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்திற்கு பிற்பகல் 2 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்:
ம. க. நல்லையா
(மருகர்)
ப. கார்த்திகேசு
(பெறாமகன்)

18/6 தொம்பியடி ஒழுங்கை,
கிராஸி றோட்,
யாழ்ப்பாணம்.
(29077)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 24-01-1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# ஒஸ்லோ சந்திப்பை அடுத்து அரபாத் கெய்ரோ விஜயம்

## சவூதி மன்னரையும் சந்திக்க ஏற்பாடு

கெய்ரோ, ஜன. 24

நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் இஸ்ரேலிய வெளியுறவு அமைச்சர் ஷிமோன் பெரேஸைச் சந்தித்துப் பேச்சுகள் நடத்திய பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் யாஸிர் அரபாத் நேற்று எகிப்து தலைநகர் கெய்ரோவுக்கு சென்று ஜனாதிபதி ஹொஸ்னி முபாரக்கைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஒஸ்லோவில் இடம்பெற்ற பேச்சின் விவரங்களை அவர் எகிப்திய ஜனாதிபதிக்குத் தெரியப்படுத்தினார் என்று தெரிவிக்கப்படுகிறது

இதேவேளை—யாஸிர் அரபாத் நேற்று மாலை சவூதி அரேபியாவுக்கு விஜயம் செய்து அங்கு சவூதி மன்னருடன் பேச்சுகள் நடத்துவதாக இருந்தது

வளைகுடாப் போரில் ஈராக்குக்கு ஆதரவாகச் செயல்பட்டவர் அரபாத்.

அதனால் அரபாத்துக்கும் சவூதி மன்னருக்கும் இடையேயான ராஜீய உறவு சீர்குலைந்து இருந்தது.

வளைகுடா யுத்தத்தின் பின்னர் அரபாத் சவூதிக்கு விஜயம் செய்வது இதுவே முதல் தடவை என்று தெரிவிக்கப்பட்டது.

நிறுவப்படவுள்ள பலஸ்தீன சுயாட்சி அரசுக்கு தேவையான நிதி உதவி பெறுவதற்கு அரபாத் சவூதியை நம்பியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது. (இ-எ)

# பர்மிய எதிர்க்கட்சித் தலைவி விடுதலை செய்யப்படலாம்

## ராணுவப் பாதுகாப்பு வாபஸ்

ரங்கூன், ஜன 24

தற்போது வீட்டுக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் பர்மிய எதிர்க்கட்சித் தலைவர் திருமதி ஆங்சாங் சுகி விடுதலை செய்யப்படக் கூடிய சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

திருமதி சுகி தங்கியுள்ள வீட்டைக்காவல் புரிந்து வந்த இராணுவத்தினர் நேற்று முதல் விலக்கிக் கொள்ளப்பட்டு விட்டனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

திருமதி சுகி வீட்டுக் காவலில் வைக்கப்பட்டுள்ள ஐந்து வருட கால எல்லை எதிர்வரும் ஜூலை மாதம் முடிவடைகின்றது.

திருமதி சுகி சமாதானத்துக்கான நோபல் பரிசையும் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

1989 முதல் திருமதி சுகி காவலில் வைக்கப்பட்டுள்ள வீட்டை 5 இராணுவத்தினர் இரவு பகலாக காவல் காத்து வந்தனர். (இ எ)

## யாழ் பிரதேச செயலர் பிரிவு

# அபிவிருத்தி வேலைகளுக்கு ஒரு கோடி நிதி ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஜன 24

இவ்ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான அபிவிருத்தி வேலைத் திட்டங்களுக்கென யாழ். பிரதேச செயலாளர் பிரிவுக்கு வடகிழக்கு மாகாண சபை ஒரு கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இதில் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு 6 லட்சத்து 5 ஆயிரம் ரூபாவும், பிரதேச செயலகத்துக்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் யாழ் கல்வித் திணைக்களத்தின் யாழ் கோட்டத்திற்கு 2 இலட்சம் ரூபாவும், தேசிய இளைஞர் சேவை மன்றத்துக்கு 25 ஆயிரம் ரூபாவும், வன பரிபாலன திணைக்களத்திற்கு 10 ஆயிரம் ரூபாவும், கமநல சேவைகள் திணைக்களத்திற்கு 15 ஆயிரம் ரூபாவும், விவசாய விரிவாக்க திணைக்களத்திற்கு 25 ஆயிரம் ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. (த-17)

# வீரப்பனின் கூட்டாளிகள் உயிருடன் பிடிபடவில்லை!

## தேவாரம் சொல்கிறார்

சந்தனமரக் கடத்தல்காரன் வீரப்பனின் கும்பலைச் சேர்ந்தவர்கள் எவரும் இதுவரை உயிருடன் பிடிக்கப்படவில்லை.

பொலீஸ் ஆணையாளர் வால்டர் தேவராம் கரூரில் செய்தியாளர்களிடம் இத்தகவலை வெளியிட்டார்.

திரு. தேவாரம் தலைமையில் விசேட பொலீஸ் படை ஒன்று தமிழ்நாடு— கர்நாடக மாநில எல்லைக் காட்டுப் புறத்தில் தங்கியிருந்து செயல்படும் வீரப்பன் கும்பலைக் கண்டு பிடிப்பதில் ஈடுபட்டுள்ளது தெரிந்ததே.

வீரப்பன் எந்த நேரத்திலும் பொலீஸரால் கைது செய்யப்படும் சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்தக் கும்பலுக்கு உணவு மற்றும் பொருள்களை விநியோகிக்கும் வழிகள் எல்லாம் துண்டிக்கப்பட்டு விட்டன. அக்கும்பலில் இருப்பவர்களின் எண்ணிக்கையும் குறைந்து விட்டது என்றும் அவர் கூறினார். (த-எ)

# வரகுப்பாண்

உரும்பிராய், ஜன. 24

வரகரிசி மாவிலிருந்து தயாரிக்கப்பட்ட வரகுப் பாண் விற்பனைக்கு வந்துள்ளது உரும்பிராய் பலாலி வீதியிலுள்ள மதுரம் பாண் தயாரிப்பு நிலையம் [illegible] உற்பத்தி செய்கிறது.

ஏனைய பாண் போன்று இதுவும் ஒரு இறாத்தல் 8 ரூபா வீதம் விற்பனையாகிறது.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் உணவு பதனிடல் பகுதியினர் இதனை அறிமுகப்படுத்தி உள்ளனர். (இ-154)

# பொ. ஐ. மு. வேட்பாளர் பட்டியல் இன்று வெளிவரும்

கொழும்பு, ஜன. 24

தென் மாகாணசபை தேர்தலுக்கான பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் பட்டியல் இன்று வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று எதிர்க்கட்சித் தலைவியின் அலுவலகத்தில் நடக்கும் கூட்டத்தில் இப்பட்டியல் வெளியிடப்படும் என்றும்—

இப்பட்டியலில் ஐ. ஐ. தே. முன்னணி உறுப்பினர்களின் பெயர்களும் இடம் பெறும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

ஐ. ஐ. தே. முன்னணியில் ஒரு பிரிவினர் ஐ.தே.கவுக்கு எதிரான தமது நிலைப்பாட்டில் இருந்து மாறவில்லை என்றும் —

அவர்கள் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் ஆதரவில் தேர்தலில் போட்டியிடுவர் என்றும் — தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-6)

தமிழக...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டுள்ளனர் என்றும்—

எனவே ரகசிய புலனாய்வுத் துறை வழங்கும் ஆலோசனைகளுக்கு ஏற்ப அரசியல் வாதிகள் நடந்து கொள்ளவேண்டும் என்றும் கடந்த வாரம் மத்திய அரசு பணிப்புரை விடுத்ததாக கொழும்பில் வெளியாகும் லங்காதீப சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது. (இ-6-5)

படையினரி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பீரங்கிப் படகிலுள் தூக்கிப் போட்டு கொண்டு சென்றனர்.

படகில் வைத்து இருவரின் கைகளும், கால்களும், கண்களும் துணிகளால் கட்டப்பட்டன.

அதிகாலைவேளை அவர்கள் காங்கேசன் துறைக்கு கொண்டு செல்லப்பட்டனர். காங்கேசன் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்ட இருவரும் கரையிறக்கப்பட்டு அங்கு வைத்து மீண்டும் தாக்கப்பட்டனர். பின்பு கரையில் இருந்த அறை ஒன்றுக்குள் கடற்படையினர் இவர்களை தூக்கிப்போட்டு விட்டுச் சென்றனர்.

மீண்டும் சனிக்கிழமை இரவு அவ்விடத்திற்கு வந்த கடற்படையினர் பீரங்கிப் படகிலுள் அவர்களைத் தூக்கிப் போட்டுக் கொண்டு கடலில் நெடுந்தூரம் சென்ற பின்னர் பின்பு இரவு 11 மணியளவில் அவர்களின் கட்டுக்களை அவிழ்த்துவிட்டு அவர்களை படகில் இருந்து தூக்கி கடலில் வீசினர்.

கடலில் வீசப்பட்ட இருவரும் நிலவின் உதவியுடன் நீந்தத்தொடங்கி நேற்று அதிகாலை 3 மணியளவில் கரையை அடைந்தனர்

மீன்பிடிக்கச்சென்ற தமது வள்ளம், வலை, மற்றும் உபகரணங்களுக்கு என்ன நடந்தது என தெரியவில்லை எனவும் அவர்கள் தெரிவித்தனர். (இ-15)

# வருகை தாமதம்

சென்னை, ஜன. 24

தமிழ்நாட்டிலிருந்து இலங்கை அகதிகளைத் தாயகம் திரும்பி அனுப்புவது இன்னும் ஒரு சில நாட்களுக்குத் தாமதமாகும்.

இவர்களின் முதலாவது அணி கடந்த சனி தமிழ்நாட்டிலிருந்து தலைமன்னார் செல்லத் திட்டமிடப்பட்டிருந்தது.

இதற்குப் பதில் நாளை 25 ஆம் திகதியிலிருந்து அடுத்த மாதத்தின் மத்திய பகுதி வரையும் கப்பல்கள் செல்லும் என்று தெரிவிக்கப்படுகிறது. (த-எ)

# விளையாட்டு நிகழ்வுகள்

எஸ். எம். பெர்னாண்டோ நிறுவனத்தின் ஆதரவில் யாழ் றோட்டரக்ட் கழகம் நடத்தும் உள்ளரங்க விளையாட்டுப் போட்டிகள் இன்று பிற்பகல் 3 மணி முதல் 5-30 மணி வரை சண்டிக்குளி வை. எம். சி. ஏ. மண்டபத்தில் மேசைப் பந்தாட்டம் இடம் பெறும். (த)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜன. 24

யாழ். மாவட்ட விளையாட்டு அபிவிருத்திக் குழுவினால் வலயரீதியில் தெரிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் பாஸ்கரன் விளையாட்டுமைதானத்தில் விநாயகர் வி. க. அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் வி.க. அணி மோதும். (இ-3)

★ ★ ★

எச்.என்.பி. வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ். மாவட்ட ரீதியில் ஹட்டன் நஷனல் வங்கியின் யாழ். கிளை நடத்தும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகள் வருமாறு:-

★ 3-00 மணி:- ஓல்ட் சோல்ட் அணி எதிர் யாழ். பல்கலைக்கழக அணி.

★ 4-15 மணி:- பல்கலைக்கழக ஆண்கள் அணி எதிர் சென்றலைட்ஸ் புளூஸ் அணி. (இ-8)

யாழ். மத்திய கல்லூரியில்

தொடர்ச்சியாக 50 ஆண்டுகளை

நிறைவு செய்துள்ள ஒரே ஒருவர்

நூலகர்

திரு. கா. மாணிக்கவாசகர்

1944 - 01 - 24 முதல் மாணவர்
1955 - 05 - 01 முதல் நூலகர்

அவர்களை

மத்தியின் மைந்தர்களான பழைய மாணவர்கள்

வாழ்த்துகின்றோம்

பாராட்டுகின்றோம்

★ எமது கல்லூரி 1816 08 01 இல் நிறுவப்பெற்றது என்பதை நிரூபிப்பதற்கு இவர் எடுத்தாண்ட நூலாதாரங்களும், ஆய்வும், உயர்நிலை ஆய்வுக் குழுவினரின் பாராட்டுதலைப் பெற்றது.

★ இரா. முத்தையா அவர்கள் முதன்முதலில் வடிவமைத்த தமிழ்த் தட்டச்சு விசைப் பலகையை அறிமுகப்படுத்தியவர்

★ 1960ஆம் ஆண்டில் இலங்கை நூலகச் சங்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவராகவும், யாழ்ப்பாணத்தில் நூலகவியல் கல்வியை வளர்ப்பவராகவும் இருந்து வருகிறார்.

(29026)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்
யாழ் மாவட்டம்

### விசேட அறிவித்தல்

01—02 -1994 தொடக்கம் முதன்மை ஆசிரியர்கள், அதிபர்கள், தொலைக்கல்வி போதனாசிரியர்கள் ஆகியோர் தனியார் கல்வி நிறுவனங்களிலோ, பிரத்தியேக வகுப்புகளிலோ கற்பிக்கமாட்டார்கள் என்பதை அறியத் தருகிறோம்.

பொதுச்செயலாளர்
யாழ் மாவட்டம்

(சி/7123)

## மரண அறிவித்தல்

### கனகசபை சிதம்பரநாதன்
(ஓய்வுபெற்ற புகையிரத நிலைய அதிபர்)

காரைநகரை பிறப்பிடமாகக் கொண்டவரும், கல்வியன்காட்டை வசிப்பிடமாகக் கொண்டவருமான கனகசபை சிதம்பரநாதன் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை — ராசம்மா தம்பதிகளின் புதல்வனும், கமலாவதியின் அன்புக் கணவரும், மஞ்சுளா (நிர்மாணத் திணைக்களம்), திருக்குமார் (யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவன்), தயாளினி (2ஆம் வருடம் யாழ் மருத்துவ பீடம்), நிசாந்தன் (அலன் - மாவீரன்), தர்ஷினி (யா/ வேம்படி மகளிர் கல்லூரி), கோகுலன் (யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தந்தையும், தியாகராஜா, பாலசுப்பிரமணியம், நாகரட்ணம், இராஜேஸ்வரன், நவமணி, காலஞ்சென்ற கணேஷன், ஆனந்தராஜா, கருணாகரன், கோபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். ஈமக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
கோகுலன்
(மகன்)

95, ராஜ பாதை,
திருநெல்வேலி கிழக்கு.
(29078)